# மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நல இயக்ககம்

அனுப்புநர்
திரு.வா.சம்பத், இ.ஆ.ப.,
ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர்
நல இயக்ககம்,
சேப்பாக்கம், சென்னை –5

பெறுநர்
இணை இயக்குநர்
கள்ளர் சீரமைப்பு,
மதுரை – 20

ந.க.எண். பி2/ 622 /2023 நாள்.16.10.2023

அம்மையீர்,

பொருள் : மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் / விடுதிகள் ஆசிரியர்கள் / காப்பாளர்கள், காப்பாளினிகள் பொதுமாறுதல் – கள்ளர் சீரமைப்பு தொடக்கப் பள்ளிகள் / நடுநிலைப் பள்ளிகள் / உயர்நிலைப் பள்ளிகள் / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் விடுதிகள் – 2023–2024–ஆம் கல்வியாண்டில் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் – அரசாணை வெளியிடப்பட்டது – மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் மற்றும் முதுகலைப்பட்டதாரி ஆசியர்களுக்கான பொதுமாறுதல் கலந்தாய்வுக்கான தேதி அறிவிப்பது –தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (டி) எண்.55, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3(1)) துறை நாள்.14.07.2023
2. இவ்வலுவலக கடிதம் எண்.பி2/622/2023, நாள்.24.07.2023
3. இவ்வலுவலக கடிதம் எண்.பி2/622/2023, நாள்.14.08.2023 மற்றும் 15.09.2023

-------

பார்வையில் காணும் அரசாணை மற்றும் கடிதங்களின் மீது தங்களின் கவனம் வரவேற்கப்படுகிறது.

பார்வை 3–ல் காணும் 15.09.2023 நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தில் 05.10.2023, 06.10.2023 மற்றும் 07.10.2023 நாட்களில் மாநில கல்வியியல் ஆராய்ச்சி (ம) பயிற்சி நிறுவனம் மூலம் பள்ளி ஆசிரியர்களுக்கான எண்ணும் எழுத்தும் பயிற்சி நடைபெற இருப்பதால் 2023 ஆம் ஆண்டுக்கான பொதுமாறுதல்

காலந்தாய்வு அக்டோபர் மாதம் மூன்றாவது வாரத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது.

சென்னை–05, பிற்படுத்தப்பட்டோர் நல இயக்கக கூட்ட அரங்கில் 2023 அக்டோபர் 19 அன்று மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கான பொதுமாறுதல் கலந்தாய்வு காலை 10.00 மணி முதல் நடைபெறும் அதனைத்தொடர்ந்து மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கான பதவி உயர்வு மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பொதுமாறுதல் கலந்தாய்வும் நடைபெறும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இது குறித்த உரிய மேல் நடவடிக்கை எடுக்கவும். மற்ற ஆசிரியர்களுக்கான பொதுமாறுதல் கலந்தாய்வுக்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்படி கலந்தாய்வு நடத்துவதை பத்திரிக்கை செய்தி 18.10.2023–க்குள் வெளியிட வேண்டும்.

16.10.2023

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்
நல ஆணையருக்காக

16/10/23